**ஹட்டன் திக்ஓயா நகர சபை - 2023**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ஹட்டன் திக்ஓயா நகர சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த வருமானச் செலவினக் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் நகர சபை சட்டத்தின் (255 அதிகாரம்) 181(1) ஆம் உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக் கூற்றுக்களிலிருந்து 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஹட்டன் திக்ஓயா நகர சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந் நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக் கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நகர சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் நகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)**

ஒட்டுமொத்தமாக நிதிக் கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக் கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக் கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நகர சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நகர சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நகர சபை செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

**1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (l) (ஈ) (iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் நகர சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (I) (ஈ) (iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**1.6 நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**1.6.1 கணக்கீட்டுக் கொள்கைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| சபையினால் வெளித்தரப்பினருக்கு தொடரப்பட்ட மற்றும் சபைக்கு எதிராக வெளித் தரப்பனரால் தொடரப்பட்ட 08 வழக்குகள் முன்னைய ஆண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரை காணப்பட்ட போதும் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப் பட்டிருக்கவில்லை | எதிர்வரும் காலங்களில் ஆராய்ந்து நடவடிக்கை எடுப்பதாக | நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

**1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | மீளாய்வாண்டில் 06 நிலையான சொத்துக்களின் பெறுமதி ரூபா 168,850 கூடுதலாக கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் மொத்தம் ரூபா 555,018 ஆன 14 சொத்து உருப்படிகள் கணக்கீடு செய்யப்பட்டு இருக்கவில்லை. | எதிர்காலங்களில் சீராக்கம் செய்வதாக | கணக்கு மீதிகள் சீராக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 854,769 ஆன 15 இருப்பு அலகுகள் மற்றும் | எதிர்காலங்களில் சீராக்கம் செய்வதாக | கணக்கு மீதிகள் சீராக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 280,414 ஆன 21 எழுதுகருவி அலகுகள் கணக்கீடு செய்யப்பட்டிருக்க வில்லை. | | |
| (இ) | மீளாய்வாண்டின் நிலையான வைப்பு வட்டி வருமானம் ரூபா 1,694,940 கூடுதலாகவும் பெற வேண்டிய முத்திரை கட்டண வருமானம் ரூபா 227,000 குறைத்தும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஈ) | சபை பயன்படுத்தப்படும் ரூபா ரூபா 446,012 ஆன 05 வாகனங்கள் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (உ) | 3962 நூலக புத்தகங்களின் பெறுமதி இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்க வில்லை | விலையை தீர்மானிபப்பதற்கு குழுவொன்றை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக | பெறுமதி இனங் காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

### 1.6.3 இணங்காத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்படும் 06 கணக்கு மீதிகளுக்குரிய பயன்பாட்டு அட்டவணைகளுடன் ஒப்பிடும்போது ரூபா 23,681,605 ஆன இணக்கமின்மை காணப்பட்டது | எதிர்காலத்தில் தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக | கணக்கு மீதிகள் சரி செய்யப்பட வேண்டும். |

### 1.6.4 கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்படும் மொத்தம் ரூபா 27,650,412 ஆன 04 நிலையான சொத்துகளுக்கரிய மற்றும் 2009 ஆம் ஆண்டினதும் 2010 ஆம் ஆண்டினதும் உள்ளூராட்சி மன்ற திணைக்களத்திடமிருந்து அறவிடப்பட வேண்டிய நிலுவை சம்பளமாக காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 7,043,260 ஆன மீதிக்குரிய ஆவணங்கள், கோவைகள் சமர்ப்பிக்கப்படாமையால் அவற்றை திருப்திகரமாக பரீட்சிக்க முடியாதிருந்தது | எதிர்காலத்தில் உரிய ஆவணங்களைச் சமர்ப்பிப்பதாக | உறுதிப்படுத்துவதற்கு பதிவேடுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும் |

**1.7 இணக்கமின்மைகள்**

**1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாய சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | | |
| i | நி.பி 104(3) மற்றும் (4) | 2020 சனவரி 28 ஆந் திகதி விபத்தனால் சேதமடைந்த வாடி வீட்டிற்காக மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரை மூன்று ஆண்டு காலம் கடந்திருந்த போதும் பரிசோதனை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்க வில்லை. | வாடி வீடு நகர சபைக்கு சொந்தமான பொருள் என்பதை பொருட் பதிவேடு இல்லாமையால் நி.பி 104 (4) பரிசோதனை மேற்கொள்ளப்படவில்லை லயென | ஆதனங்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும். |
| ii | நி.பி 371(5) | செயற்பாடு முடிவடைந்தவுடன் முற்பணங்களை தீர்வு செய்ய வேண்டிய போதிலும் 1987 முதல் 2023 வரையான காலப் பகுதியில் காணப்படும் ரூபா 617,174 ஆன 49 முற்பணங்களை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கவில்லை. | நி.பி 371(5) 35 ஆண்டு காலப்பகுதியிலிருந்து வரும் பழைய மீதியாக இருப்பதால் எதிர்காலத்தில் தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக | முற்பணங்களை தீர்வு செய்வதற்குக் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**02. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 43,466,570 ஆக இருந்துடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 41,565,879 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) வீதவரியும் வரியும் | 17,944,000 | 18,230,346 | 20,894,910 | 15,894,141 | 17,600,000 | 19,310,897 | 16,615,917 | 18,558,706 |
| (ii) வாடகை | 29,820,000 | 17,865,947 | 17,762,904 | 9,680,005 | 29,195,000 | 14,247,236 | 16,357,087 | 9,576,962 |
| (iii) அனுமதிப்பத் திர கட்டணங்கள் | 3,700,000 | 875,091 | 875,091 | - | 3,600,000 | 819,207 | 819,207 | - |
| (iv) ஏனைய வருமானம் | 27,578,000 | 20,259,081 | 16,371,755 | 16,751,675 | 127,184,000 | 10,648,290 | 8,378,563 | 12,864,349 |
| | 79,042,00 | 57,230,465 | 55,904,660 | 42,325,821 | 177,579,000 | 45,025,630 | 42,170,774 | 41,000,017 |

### 2.2.2 வருமானம் சேகரிப்பின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரிப்பின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **(அ)** | **வீதவரியும் வரியும்** | | |
| | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை வீதவரி ரூபா 8,406,716 ஆக இருந்தது. அதில் 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட 07 வளவுகளில் ரூபா 50,484 தொகை 05 ஆண்டுகளுக்கும் 10 ஆண்டுகளுக்கு இடைப்பட்டிருந்ததுடன் 432 வளவுகளில் ரூபா 2,439,721 தொகை மற்றும் 01 ஆண்டு முதல் 05 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலப்பகுதிக்குரிய ரூபா 5,257,669 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நிலுவை வருமானத்தை அறவீடு செய்தல் வேண்டும். |
| **(ஆ)** | **வாடகை** | | |
| i | ஹட்டன் வாடிவீட்டினை வாடகைக்கு வழங்கியமையால் 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளுக்குரிய ரூபா 1,581,710 ஆன வாடகையை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் | நிலுவை வாடகையை கொடுப்பனவு செய்யுமாறு நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு | நிலுவை வருமானத்தை அறவீடு செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | அறிவித்துள்ளதாக | |
| ii. | மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு 441 கடைகளில் நிலுவை ரூபா 9,680,005 ஆக ,இருந்தது. அதில் 03 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக வாடகை அறவிட வேண்டிய 09 இறைச்சி, மீன் கடை கடை உரிமையாளர்களிடமிருந்து ரூபா 5,299,694 தொகை அறவிடப்படாதிருந்ததுடன் அதில் 06 பேரிடமிருந்து 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 405,964 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது. நிலுவை வாடகை 01 இற்கும் 3 ஆண்டுகளுககும் இடைப்பட்டிருந்த 41 கடை உரிமையாளர்களிடமிருந்து ரூபா 1,133,297 தொகையும் நிலுவை வாடகை 03 ஆண்டுகளுக்கு மேற்பட்ட 12 கடை உரிமையாளர் களிடமிருந்து ரூபா 201,527 தொகையும் அறவிடப்பட வேண்டியிருந்தது. | நிலுவைத் தொகையை எதிர்காலத்தில அறவிடுவதாக | - மேற்படி – |

**(இ) நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரை கட்டணங்கள்**

| | | |
|---|---|---|
| மாகாணத்தின் பிரதான செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் பெற வேண்டிய முத்திரைக் கட்டணங்கள் ரூபா 8,745,700 ஆக இருந்தது. | எஞ்சிய பணத்தைப் பெற்றுக் கொள்வதற்கு அட்டவணைக் கட்டணங்கள் கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளதாக | வருமானத்தை பெற்றுக்கொள்ள வேண்டும். |

**(ஈ) ஏனைய வருமானம்**

| | | |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு ரூபா 2,867,975 ஆன காணி வரி மீதியொன்று அறவிடப்பட வேண்டியிருந்தது | நிலுவைத் தொகையை கொடுப்பனவு செய்யுமாறு அறிவிக்கப்பட்டுள்ளதாக | நிலுவை மீதிகளை அறவீடு செய்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தினால் கையளிக்கப்பட்டுள்ள செயற்பாடுகளை நிறைவேற்றுதல்

நகர சபைகள் சட்டத்தின் 4 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது செயலாற்றல் அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் ஆண்டுகளுக்குரிய செயலாற்றல் அறிக்கை உரிய ஆண்டுகளில் | செயலாற்றல் அறிக்கையொன்று தயாரிக்கை தயாரிக்கப்பட |

| | | | |
|---|---|---|---|
| | | தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக | வேண்டும் |
| (ஆ) | சுற்றாடல் அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டிருந்த 14 நிறுவனங்களின் சுற்றாடல் அனுமதிப்பத்திரங்களின் செல்லுபடிக் காலம் முடிவடைந்திருந்த போதும் அனுமதிப்பத்திரஙகளை புதுப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் இந்நடவடிக்கை களை மேற்கொள்வதாக | சுற்றாடல் அனுமதிப்பத்திரம் வழங்க அல்லது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | 1987 இன் 18 ஆம் இலக்க நகர சபைகள் கட்டளை சட்டத்தின் IV ஆம் பகுதியின் 103 ஆம் பிரிவின் நகர சபை அதிகாரப் பிரதேசத்தில் பரிசோதனைக்கு உட்படுத்திய 29 சிற்றுண்டிச்சாலைகளில் உணவு வளவு தரப்படுத்தலின் பிரகாரம் இருக்க வேண்டிய நியதிகள் பூர்த்தி செய்யப்படாதிருந்த போதும் அது தொடர்பில் எவ்வித நடவடிக்கையொன்றும் எடுக்கவில்லை. | சிற்றுண்டிச்சாலை வகைப்படுத்தப்பட்டு வருவதாக நடவடிக்கை எடுப்பதாக | சட்டத்தில் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (ஈ) | அறிவித்தல் பதாதைக் கட்டணங்களை அறவிடுவதற்குரிய உப உறுப்புரைகள் தயாரிக்கப் பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் இந் நடவடிக்கை களை மேற்கொள்வதாக | சடகணிப்பீடு செய்து கட்டணங்களை அறவிடுவதற்கு செயற்பட வேண்டும் |

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 47 கடைகள் குத்தகையாளருடன் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கை காலம் முடிவடைந்து 05 ஆண்டுகள் முதல் 25 ஆண்டுகள் வரையான காலம் கடந்திருந்த போதிலும் உடன்படிக்கையை புதுப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | குத்தகையாளருடன் உடன்படிக்கையை புதுப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளதாக | கடை உரிமையாளர்களுடன் உடன்படிக்கை செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | சபைக்கு உரிய 10 கடைகள் அனுமதி ஒன்று இல்லாமல் உப குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது இனங்காணப்பட்டு இருந்த போதும் அது தொடர்பாக எவ்வித நடைமுறை ஒன்றும் பின்பற்றப்பட்டு இருக்கவில்லை. | அனுமதியின்றி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள கடை உரிமையாளர்களுக்காக அந்த உப குத்தகை வழங்குதலை நிறுத்துமாறு அறிவிக்கப்பட்டுள்ளதாக | சட்டத்தின் மூலம் நடவடிக்கை எடுத்தால் வேண்டும். |
| (இ) | நகர சபை அதிகார பிரதேசத்தில் காணப்படுகின்ற 314 கடைகள் 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் இரண்டு சந்தர்ப்பங்களின் போது அரசின் விலைமதிப்பீட்டு | செலுத்த வேண்டிய நிலுவை தொகையை தொடர்பாக அறிவிக்கப்பட்டுள்ளதாக | மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் நிலுவை கட்டணங்கள் சேகரிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | திணைக்களத்தினால் வழங்கப்பட்டிருந்த மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் கடை வாடகை அறவிடாமை காரணமாக மீளாய்வாடின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு முன்னைய ஆண்டின் ஜுன் முதல் மீளாய்வாண்டின் திசெம்பர் மாதம் வரை 19 மாதங்கள் காலப்பகுதியில் 314 கடை உரிமையாளர்களிடமிருந்து ரூபா 15,481,979 ஆன வாடகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஈ) | முன்னைய ஆண்டுக்குரிய சபைக்கு கிடைத்திருந்த 07 பொதுமக்கள் முறைப்பாடு களுக்குரிய தேவையான நடவடிக்கைகளை மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் எடுக்கப்பட்டிருக்கவில்லை | தீர்வு செய்ய முடியாததால் எதிர்காலத்தில் இது உரிய நிறுவனங்களுக்கு அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக | பொது மக்கள் சேவை தாமதம் இன்றி நிறைவேற்றப்பட வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 09 ஆண்டுகள் முதல் 13 ஆண்டுகள் வரையான காலப் பகுதியை கடந்திருந்த ரூபா 9,985,139 ஆன 03 கணக்கு மீதிகள்ள அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | எதிர்காலத்தில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | பெறவேண்டிய பணம் மற்றும் பெற வேண்டிய பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 04 ஆண்டுகள் முதல் 12 ஆண்டுகள் வரையான காலம் கடந்திருந்த ரூபா 4,393,413 ஆன 02 கணக்கு மீதிகள் தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (எ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 2008 ஆம் ஆண்டுக்கு முன்னர் இருந்து வரும் ரூபா 122,643 ஆன முற் கொடுப்பனவுகள் 4 தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

**3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| | **கணக்காய்வு அவதானிப்பு** | **சபையின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | ஹட்டன் நகரின் மத்தியில் அமைந்துள்ள பெரிய மண்டபம் ஒன்று சமையலறை ஒன்று மற்றும் மலசலகூட முறைமை ஒன்றுடன் கூடிய விழா மண்டபம் மற்றும் ஹட்டன் திக்ஓயா வாசிப்பு மண்டபம் மற்றும் நூலகக் கட்டிடங்கள் | திருத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | திருத்தியமைத்து பராமரிக்கப்பட வேண்டும் |

| | | |
|---|---|---|
| திருத்தம் செய்யப்படாமலும் பராமரிப்பின்றியும் நூலகம் 3,000 புத்தகங்களுடன் அழிவடைவதற்கு இடமளிக்கப்பட்டிருந்தது. | | |
| (ஆ) 2015 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் ரூபா 552,780 தொகை செலவழித்து பொருத்தப்பட்ட CCTV கெமரா முறைமை முறையாக செயற்பாடு நிலைமையில் இல்லாமல் இருந்ததுடன் களஞ்சியப்படுத்தப்பட்ட தரவுகளை பதிவிறக்க முடியாத இருந்தமையால் CCTV கெமரா பொருத்தியதன் நோக்கம் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | திருத்த நடவடிக்கைகளுக்காக குறித்த நிறுவனத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக | செயற்பாட்டு நிலைமைக்கு திருத்தம் செய்யப்பட வேண்டும். |

### 3.4 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 07 நபர்களால் ஹட்டன் பஸ் நிலையத்திற்கு அருகாமையில் வியாபார அனுமதிபத்திரம் ஒன்று இல்லாமல் அனுமதி இன்றி இல்லாமல் கட்டணங்கள் கொடுப்பனவு செய்யாமல் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்த போதும் சபை அத்துமீறிய வியாபாரம் தொடர்பாக எந்த ஒரு சட்ட நடவடிக்கையும் எடுத்திருக்கவில்லை. | இந்த நிர்மாணத்த எதிர்காலத்தில் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | அத்துமீறிய வியாபாரங்கள் நிறுத்தப்பட வேண்டும் |
| (ஆ) தீபாவளி விழா சமயத்தில் ஒலிபெருக்கி உபகரணங்கள் மூலம் வியாபார விளம்பர நடவடிக்கைகளை செய்வதற்காக 03 நபர்கள் ஆட்சேர்ப்பதற்கு கேள்வி கூறப்பட்டிருந்த போதும் செயலாளரினால் எவ்வித கேள்வி நடைமுறை இன்றே ரூபா 225,000 இற்கு தனியார் தரப்பினரிடமிருந்து கேள்வி கோரப்பட்டிருந்தது | எதிர்காலத்தில் சீராக்கம் செய்வதாக | கேள்வி நடைமுறை பின்பற்றப்பட வேண்டும் |

### 3.5 ஒப்பந்த நிர்வாகம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மொத்த கிரயம் ரூபா 4,936,438 ஆன ஹட்டன் பஸ் நிறுத்துமிட அபிவிருத்தி செயற்திட்டம் பெறுகை வழிகாட்டி கோவையின் 1.2..1 இன் பிரகாரம் பெறுகை நடைமுறை பின்பற்றப்படாமல் ஒரே நிர்மாணத்தை 03 மதிப்பீடுகளாக தயாரித்து அங்கீகரிக்கப்பட்ட சங்கங்களுக்கு | கணக்காய்வில் சுட்டிக்காட்ட பிரகாரம் மாகாண பொறியியலாளரின் கண்காணிப்பின் கீழ் எதிர்வரும் நடவடிக்கை எடுப்பதாக | பெறுகை நியதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு ரூபா 4,943,393 செலவிடப்பட்டிருந்தது அவ்வாறே முதலாவது மற்றும் இரண்டாவது தடவை தார் இடுவதற்காக ரூபா 306,124 தொகை கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது

## 3.6 மனிதவள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இடமாற்றம் பெறறிருச் சென்றுள்ள உத்தியோகத்தர்களின் வீட்டு வாடகை இடர் கடன் என்பவற்றின் மொத்தம் ரூபா 374,436 தொகை 02 ஆண்டு காலமாக அறவிடப்படாமல் காணப்பட்டது. | காணப்படும் இந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளதாக | வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டும் |
| (ஆ) | ஓய்வுபெற்ற, மரணித்த மற்றும் வேலையை விட்டுச் சென்ற மற்றும் வேலை இடைநிறுத்தம் செய்யப்பட்ட 11 பேரிடமிருந்து 01 ஆண்டு 08 மாதங்கள் 03 ஆண்டுகள் வரையான காலப்பகுதிக்குரிய ரூபா 1,513,655 ஆன கடன் மீதி அறவிடப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் இது தொடர்பாக நடவடிக்கை எடுப்பதாக | தாபன விதிக்கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4 கணக்களிதன்மையும் நல்லாளுகையும்
## 4.1 வருடாந்த செயல்நடவடிக்கை திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக வருடாந்த செயல்நடவடிக்கை திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் வரும் ஆண்டுகளிற்காக செயல் நடவடிக்கைத் திட்டமொன்றை உரிய ஆண்டுகளில் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக | செயல் நடவடிக்கைத் திட்டயொன்று தயாரித்து சமர்ப்பிக்கப்பட வேண்டும். |